பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

21 05 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலில் ஆறாவது கட்ட வாக்குப்பதிவு வரும் 25-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.
2. மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட தில்லி துணை முதலமைச்சர் திரு மணிஷ் சிசோடியாவின் நீதிமன்ற காவல் இம்மாதம் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
3. துபாயில் நடைபெற்று வரும் சர்வதேச அணிகலன் மற்றும் ஆடை வடிவமைப்பு கண்காட்சியில் இந்தியாவின் 35 ஏற்றுமதி நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.
4. குவைத் கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட்டில் இன்று நடைபெறும் கொல்கத்தா-வுக்கு எதிரான முதல் தகுதிச்சுற்று ஆட்டத்தில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் ஆறாவது மற்றும் ஏழாம்கட்ட வாக்குப்பதிவுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வரும் 25-ஆம் தேதி ஆறாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் நாளை மறுநாள் நிறைவடைகிறது.

இதையொட்டி அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி, உத்திரபிரதேசத்தில் பகுஜன் சமாஜ் மற்றும் சமாஜ்வாதி கட்சிகள் ஆட்சியில் இருந்தபோது சமூக விரோதிகள் மற்றும் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததாகக் கூறினார்.

அக்கட்சிகள் ஆட்சியில் இருந்தபோது ஏழை எளிய மக்களின் நிலம் மற்றும் பொருட்கள் அபகரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் பிஜேபி உத்திரபிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த பிறகு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டு தற்போது சிறையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், உத்திரபிரதேச மாநிலம் பதோஹியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

பிஜேபி-யின் தவறான கொள்கைகளால் அக்கட்சி மக்களின் ஆதரவை இழந்து விட்டதாக அவர் கூறினார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாக் கூறினார்.

பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்காக திரு ஹேமந்த் சோரன் பாடுபட்டவர் என்று தெரிவித்தார்.

[]<<<>>>[]

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 33-ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

இந்நாள் தேசிய பயங்கரவாத எதிர்ப்பு தினமாகவும் கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், மறைந்த பிரதமர் ராஜீவ்காந்திக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

தில்லி வீர்பூமியில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

ஆங்கு சர்வமத பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நாளையொட்டி, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் தமிழக காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

[]<<<>>>[]

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட தில்லி துணை முதலமைச்சர் திரு மணிஷ் சிசோடியாவின் நீதிமன்ற காவல் இம்மாதம் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி திருமதி காவேரி பவேஜா, இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் ஆவணங்களை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கால அவகாசம் குறித்து தெரிவிக்குமாறு அமலாக்கப்பிரிவுக்கு உத்தரவிட்டார்.

கூடுதலாக தேவைப்படும் கால அவகாசம் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர்கள் தெரிவிக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்ஸி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹுசைன் அமீர் அப்துல்லாஹைன் மறைவுக்கு இந்தியா சார்பில் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

புதுதில்லியில் உள்ள ஈரான் தூதரகத்திற்குச் சென்ற வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இந்தியா சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

இந்தியாவின் மதிப்புமிக்க நண்பர்களாக இரு தலைவர்களும் இருந்தார்கள் என்றும், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதில் மாபெரும் பங்காற்றியவர்கள் என்றும் சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.,

இந்த இக்கட்டான தருணத்தில் ஈரான் மக்களோடு இந்தியா துணை நிற்பதாகவும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாயில் நடைபெற்று வரும் 17-வது சர்வதேச அணிகலன்கள் மற்றும் ஆடை வடிவமைப்பு கண்காட்சியில் இந்தியாவின் 35 அணிகலன் ஏற்றுமதி நிறுவனங்கள் தங்களது பொருட்களை காட்சிக்கு வைத்துள்ளனர்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அணிகலன்களுக்கு இக்கண்காட்சியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

தற்கால நாகரீக மாற்றத்திற்கு ஏற்ற வகையில் அணிகலன்களும், ஆடை வடிவமைப்புகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவின் பாரம்பரிய சிறப்புமிக்க பருத்தி ஆடைகள், செயற்கை நார் இழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடைகள், பெரும்பாலான மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

அதிக அளவில் இந்திய தொழில் முனைவோர் இதில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அணிகலன்கள் மற்றும் ஆடை வடிவடைப்பு கண்காட்சி நாளை நிறைவடைகிறது.

நடப்பு ஆண்டில் 16 பில்லியன் டாலர் அளவுக்கு இந்திய ஆடைகள் மற்றும் அணிகலன்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

குவைத் கடலோர காவல்படையினரால் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மாநில தலைமைச் செயலர் திரு சிவதாஸ் மீனா, மத்திய வெளியுறவுத்துறை செயலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கடந்த டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதி கைது செய்யப்பட்ட இந்த மீனவர்களை விடுவிக்கக்கோரி மாநில முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கடந்த பிப்ரவரி மாதம் ஒன்பதாம் தேதி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் அண்டை நாடுகளைச் சேர்ந்த கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதை தடுக்கவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கவும் உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறும் மாநில அரசின் சார்பில் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்துக்கு காவிரியில் இரண்டு புள்ளி ஐந்து டி எம் சி தண்ணீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு எஸ் கே ஹல்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா,. கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சார்பில் மாநில நீர்வளத்துறை செயலர் திரு சந்தீப் சக்சேனா, காவிரி தொழில்நுட்பக்குழுத் தலைவர் திரு சுப்ரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி மே மாதம் வரையில் தமிழகத்திற்குத் தர வேண்டிய இரண்டு புள்ளி ஐந்து டி எம் சி தண்ணீரை கர்நாடகா விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தின் தென்மாவட்டங்களிலும், உள்மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடலில் சூறாவெளிக்காற்று வீசக்கூடும் என்பதல் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நாளை மறுநாளைக்குள் கரைக்கு திரும்புமாறும் திரு செந்தாமரைக் கண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்துள்ளது.

[]<<<>>>[]

கேரளாவில் மேலும் ஐந்து நாட்களுக்கு மிக கனமழை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பத்தனம்திட்டா, இடுக்கி மாவட்டங்களுக்கு சிவப்பு கனமழை எச்சரிக்கையும், திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம் மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் கனமழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடுமையான சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால் கேரள மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

லண்டனிலிருந்து புறப்பட்ட சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானம் நிலைக்குலைந்ததால் அவசரமாக தாய்லாந்து தலைநகர் பங்காக்கில் தரையிறக்கப்பட்டது.

இதில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விமானத்தில் மொத்தம் 21 பயணிகளும், 18 பணியாளர்களும் பயணம் செய்தனர்.

எதனால் இந்த விமானம் வானில் பறந்து கொண்டிருந்தபோது நிலைகுலைந்ததற்கான காரணம் தெரியவரவில்லை.

விமானத்தில் காயமடைந்தவர்களுக்கு உரிய மருத்துவ உதவிகளை செய்ய தாய்லாந்து அரசு ஏற்பாடு செய்துள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் முதல் தகுதி சுற்று ஆட்டத்தில் கொல்கத்தா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

[]<<<>>>[]

உலக பேட்மிண்டன் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ரெங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை முதலிடத்தை பிடித்துள்ளது.

கடந்த வாரம் தாய்லாந்து ஓப்பன் சூப்பர்-500 போட்டியில் இந்த இணை வெற்றிபெற்றதன் மூலம் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளதாக உலக பேட்மிண்டன் ஃபெடரேஷன் அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணையும், சிம்ரன் சிங்கி – ரித்திகா தாக்கர் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை 21-14, 21-10 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu Hsun Huang - Ting Yu Liang** இணையை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் சிம்ரன் சிங்கி – ரித்திகா தாக்கர் இணை 21-14, 21-13 என்ற செட் கணக்கில் தாய்லாந்து இணையை வென்றது.

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியின் காலிறுதி சுற்றுக்கு இந்தியாவின் **Vaidehi Chaudhari -** ஜப்பானின் **Yukina Saigo** இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 1-6, 7-6, 10-8 என்ற செட் கணக்கில், தைவான் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

உலக வில்வித்தை போட்டி தென்கொரியாவில் இன்று தொடங்கியது.

இதில் இந்தியாவின் சார்பில் 16 பேர் கொண்ட குழு பங்கேற்றுள்ளது.

***End of News***